## காவல் துணை ஆணையர் (தலைமையிடம்) அவர்களின் செயல்முறைகள்

### முன்னிலை: திரு.க. குணசேகரன்

ந.க.எண். ஓ1/45378/2018 நாள்:26 / 11 / 2020
CPO No. 1125 /2020

சிறு தலைப்பு : காவல்- கோவை மாநகரம் – பணியமைப்பு- கருணை அடிப்படை பணி நியமனம் - இளநிலை உதவியாளர் திரு. பா.கோபகுமார். (த /பெ. மறைந்த திரு. கே. பாலகிருஷ்ணன், உதவி ஆய்வாளர்) என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் தரத்தில் 01.12.2017 முற்பகல் முதல் வரன்முறைப் படுத்தி அரசாணை இடப்பட்டது - பதில் ஆணை (Counter Order)பிறப்பித்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை : 1) தலைமையலுவலகக் குறிப்பாணை ந.க.எண். 1433/C.A 1/2005-03, நாள் 13.07.2015 மற்றும் கோவை மாவட்ட காவல் அலுவலக மா. ஆ. எண். 3544/05, ந.க.எண். எம் 2/4837/ 2005, நாள் 17.08.2005.

2) தலைமையலுவலக ஆணைகள் ந.க.எண். 130052/NGB 2(2)/2016, நாள் 26.10.2017 மற்றும் கோவை மாநகர காவல் அலுவலக ஆணை எண். 1477/2017, ந.க.எண். என் 1/73614/ 2017, நாள் 27.10.2017.

3) அரசாணை (3 டி) எண். 56 உள் (காவல் 15) துறை. நாள் 11.11.2020 மற்றும் தலைமையலுவலகக் குறிப்பாணை ந.க.எண். 14/C.A.R-2/2018, நாள் 19.11.2020.

--------0----------

**ஆணைகள் :**

சென்னை காவல் வானொலி அலுவலகத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்த திரு.கே.பாலகிருஷ்ணன் என்பவர், பணியில் இருக்கும் போது கடந்த 13.01.1988 அன்று இறந்து விட்டதால், அவரது வாரிசான திரு.பா.கோபகுமார் என்பவருக்கு பார்வை ஒன்றில் கண்டுள்ள ஆணைகளின்படி, கணினி விவரப் பதிவாளராக 03.10.2005 முதல் கோவை மாவட்ட காவல் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டார். பின்னர் பார்வை 2ல் கண்டுள்ள ஆணைகளின்படி, பணி மாறுதலில் கணினி விவரப் பதிவாளர் தரத்திலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்த்தப்பட்டு, கடந்த 01.12.2017 முற்பகல் முதல் கோவை மாநகர காவல் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

2) மனுதாரரின் தந்தை இறந்த நாள் 13.01.1988 ஆகும். ஆனால் அவரது வாரிசான மகன் திரு.பா.கோபகுமார் தனக்கு பணிநியமனம் அளிக்கக் கோரி விண்ணப்பித்த நாள் 21.07.1998ஆகும். மேலும் அவரது பிறந்த தேதி 13.12.1980 ஆகும். எனவே அரசு ஊழியர் மரணமடைந்த நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி விண்ணப்பிக்காததாலும், தந்தை இறந்த போது அவரது வயது 18 பூர்த்தியடையாமல் இருந்ததாலும், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் திரு.பா.கோப குமார் என்பவரின் பணியினை 01.12.2017 முற்பகல் பணி வரன்முறை செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

3) பார்வை 3-ல் கண்டுள்ள அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் திரு பா கோபகுமார் என்பவரின் பணியினை அரசாணை (நிலை) எண். 18 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020க்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 58-ன் கீழ், மேதகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ( பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 20 (6) (b) மற்றும் பணப் பலன்கள் நியமன

Scanned with CamScanner

நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்க தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ( பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 28 (2) ஆகியவற்றினை தளர்வு செய்தும், அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 01.12.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது மேலும் இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அ.சா எண் 17630/க்யூ. 1/ 2020-2, நாள் 05.11.2020 மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அ.சா. எண். 28941/ஜி 2/ 2020-1, நாள் 09.11.2020 பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) எனவே கோவை மாநகர காவல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.பா.கோபகுமார் என்பவரது பணியினை, மேற்குறிப்பிட்டுள்ள அரசாணை (3 டி) எண். 56 உள் (காவல் 15) துறை, நாள் 11.11.2020ல் ஆணையிட்டுள்ளவாறு, இளநிலை உதவியாளர் தரத்தில் 01.12.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது மேலும் முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியரின் ஆண்டு ஊதிய உயர்வு ஊதிய நிலுவை ஏதேனும் இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

ஒம்/க.குணசேகரன்
காவல் துணை ஆணையர்
(தலைமையிடம்)
கோவை மாநகரம்

பெறுநர்

திரு. பா. கோபகுமார்,
இளநிலை உதவியாளர்,
மாநகர காவல் அலுவலகம்,
கோவை -18.

நகல்: காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-4.
நகல்: கருவூல அதிகாரி, மாவட்டக் கருவூலம், கோவை-18.
நகல்: அ3, பி1, பி2, எப் 4, எல் 4, எல் என்1, ஒய் 3 இருக்கை உதவியாளர்கள், மாநகர காவல் அலுவலகம், கோவை மாநகரம்.
நகல்: மாநகர காவல் ஆணை புத்தகம் மற்றும் இருப்புக் கோப்பு

//உ.ந.உ.ப.அ//

27/11/2020

கண்காணிப்பாளர்.

27/11/2020

Scanned with CamScanner

சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - காவல் துறை திரு. பா.கோபகுமார் (த/பெ. மறைந்த திரு. கே. பாலகிருஷ்ணன், உதவி ஆய்வாளர்) என்பவர் காவல் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவுகள் 20(6)(b) மற்றும்28(2) ஆகியவற்றை தளர்வு செய்து பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**உள் (காவல் –15) துறை**

அரசாணை (3டி) எண். 56

நாள் 11.11.2020
சார்வரி வருடம்
ஐப்பசி மாதம் –26
திருவள்ளுவர் ஆண்டு–2051
படிக்கப்பட்டது :–

1. காவல் துறை தலைமை இயக்குநரின் கடித எண்.14 /சி.ஏ.ஆர்.1/2017, நாள் 21.02.2019.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில், காவல் துறை தலைமை இயக்குநர், திரு. கே. பாலகிருஷ்ணன், என்பவர் சென்னை காவல் வானொலி அலுவலகத்தில், உதவி ஆய்வாளராக பணியிலிருக்கும் போது இறந்த நாள் 13.01.1988. அவரது வாரிசான திரு. பா. கோபகுமார் பணிநியமனம் அளிக்கக் கோரி விண்ணப்பித்த நாள் 21.07.1998 என்றும் விண்ணப்பதாரரின் பிறந்த தேதி 13.12.1980 எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும் அவருடைய குடும்பத்தில் யாரும் அரசுப் பணியில் இல்லை என்றும் திரு. பா.கோபகுமார் என்பவருக்கு பணிநியமனம் அளிக்கும்படி கேட்டு விண்ணப்பம் செய்ததில் நியமன அதிகாரியால் தனியர் 03.10.2005 முதல் கணினி விவரப் பதிவாளராக கோயமுத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு, பின்னர் 01.12.2017 முற்பகல் முதல் கோயமுத்தூர் மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்து தனியரின் இளநிலை உதவியாளர் பணியினை 01.12.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்த வேண்டும் என அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. காவல் துறை தலைமை இயக்குநரது கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. பா.கோபகுமார் (த/பெ. மறைந்த திரு. கே. பாலகிருஷ்ணன், உதவி ஆய்வாளர்) என்பவரது தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைக்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58–ன் கீழ், மேதகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் [illegible]

Scanned with CamScanner

(பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2) ஆகியவற்றினைத் தளர்வு செய்தும், அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 01.12.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால் தனிபரின் ஆண்டு ஊதிய உயர்வு/ஊதிய நிலுவை ஏதேனும் இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதிபடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அ.சா. எண். 17630/க்யூ1/2020-2, நாள் 05.11.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறையின் அ.சா. எண். 28941/ஜி2/2020-1, நாள்09.11.2020, பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

S.K.பிரபாகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை - 4.
திரு பா.கோபகுமார் (த/பெ. மறைந்த திரு கே. பாலகிருஷ்ணன், உதவி ஆய்வாளர்)
கோயமுத்தூர் மாநகர காவல் ஆணையாளர் அலுவலகம்
(காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை- 18.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
உள் (காவல்-5) துறை, சென்னை.9.
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9.
பணியாளர் (ம) நிர்வாக சீர்த்திருத்தத் துறை, சென்னை-9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

N. [signature] 11.11.2020
பிரிவு அலுவலர்

Scanned with CamScanner